செ.கு.எண் : 73 நாள் : 19-02-2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

அறிக்கை – 19. 2. 2012

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம் கீழ்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஜான்பிரபு என்பவரின் 3 வயது குழந்தை ஜான்செல்சியா 17.2.2012 அன்று, அறுந்து விழுந்திருந்த மின்கம்பியை தொட்டதால் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிக்க துயருற்றேன்.

குழந்தை ஜான்செல்சியாவின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அக்குழந்தையின் குடும்பத்தினருக்கு எனது இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்விபத்தில் காலமான குழந்தை ஜான்செல்சியா குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை 9.